**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

# STC No. 1269/2022

Deposition of RW1

| | | | |
|---|---|---|---|
| Name | : ரவிராஜன் | Defence | : |
| Husband Name | : முத்துலிங்கம் | Court | : |
| Village | : சென்னை | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 37/2025 | | |

Dated :–19.08.2025.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை:–**

ஈழவளவன் எனது மாமா ஆவார். எனது திருமணம் 10.11.2019 அன்று வைத்தீஸ்வரன் கோயிலில் ஈழவளவன் தலைமையில் நடந்தது. நான் எனதுதிருமணத்திற்காக புகார்தாரரிடம் ரூ. 10 லட்சம் பணம் கொடுத்திருந்தேன். எனதுதிருமணம் முடிந்து 6 மாதங்கள் கழித்து நான் கொடுத்த பணத்திற்கு புகார்தாரரிடம் கணக்கு கேட்டேன். அவர் கணக்கு கொடுக்கவில்லை. நானும் மாமா தானே என்று விட்டுவிட்டேன். கடந்த 08.06.2021 அன்றுஅதிகாலை 03.30 மணியளவில் எனது வீட்டிற்கு புகார்தாரர் மற்றும் அவருடன் ராமு, பாரதி, அறிவழகன், கார்த்திகேயன் மற்றும் பெயர் தெரியாத சிலர் மொத்தம் 10 நபர்கள் வந்தார்கள். நான் கதவை திருந்தவுடன் எனது மாமா ஈழவளவன் ஷோபாவில் தள்ளி அடித்தார். ராமு என்பவர் எனது இரண்டு கைகளையும் பின்னால் வைத்து பிடித்துக்கொண்டார். பாரதி, அறிவழகன், கார்த்திகேயன், ஈழவளவன் ஆகியோர்கள் என்னை அடித்தார்கள். அதில் எனக்கு தாவங்கட்டையில் ரத்தக்காயம் ஏற்பட்டது. வலது பக்க முகத்தில் வீக்கம் ஏற்பட்டது. அதிகாலை 05.30 மணி வரை என்னை அடித்தார்கள். நான் எனது அலுவலகத்திற்கு எடுத்துச்செல்லும் பையில் வைத்திருந்த நான் கையெழுத்து போட்ட 5

காசோலைகள், பணம், எங்கள் வீட்டில் பொறுத்தப்பட்டிருந்த சிசிடிவி கேமரா, Memory Card ஆகியவற்றை எடுத்துக்கொண்டு சென்றுவிட்டார். என்னிடம் கணக்கு கேட்டாயே அதற்கு நான் கணக்கு சொல்கிறேன் என சொல்லிவிட்டு சென்றுவிட்டார். நீ உன் மாமியார் மற்றும் மனைவி சொல்வதை கேட்டுக்கொண்டு என்னிடம் கணக்கு கேட்பாயா, நான் உனக்கு கணக்கு காட்டுகிறேன் பார் என கூறிவிட்டு சென்றார். அப்போது எடுத்துச்சென்ற காசோலையை வைத்து என் மீது மோசடியாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

| **எண்.** | **தேதி** | **ஆவணங்களின் விபரங்கள்** |
|---|---|---|
| 1 | 10.11.2019 | எனது திருமண பத்திரிக்கையின் அசல் **எமசாஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 2. | -- | நான் எதிரி மீதும் மற்ற நபர்கள் மீதும் ஆனைக்காரன் சத்திரம் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் முதல் தகவல் அறிக்கை **எமசாஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |

புகார்தாரர் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கை தள்ளுபடி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.